3 - JAN 1956
MADRAS

பட்டினி வேண்டாம்   Regd. No. M. 6207

கிராமோதயம்

மலர் 2 | திருப்பூர் – டிசம்பர் 1 * 1954 * விலை 1 அணா | இதழ் 26

நூல் காணிக்கையில் விஸ்வரூப தரிசனம்

* வினோபாஜி *

நூல் காணிக்கையைப்பற்றி நான் எண்ணும் பொழுது அதில் எவ்வளவு உழைப்பு அடங்கியிருக்கிறது, நாம் அது வெற்றியடைய எவ்வளவு சக்தியை உபயோகிக்கவேண்டும் என்று நன்கு புலனாகிறது.

ஒரு வருடத்திற்கு ஒரு சிட்டம் நூலை தேசத்திற்காகக் கொடுப்பது என்று சொல்லும் பொழுது நமக்கு அது மிகவும் அற்பமாகப்படுகின்றது. ஆனால் நாம் கொடுக்கும் நூல் சிட்டம் நாமே நூற்றதாகவும் நல்ல தரமுள்ளதாகவும் இருக்கவேண்டும். நூல் சிட்டத்தை ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வருடமும் கொடுக்கவேண்டும். இது எவ்வளவு பெரிது என்று எண்ணிப் பார்த்தால் இதில் விஸ்வரூபம் தெரியும்.

நூறு பேருக்கு ஒருவர் ஒரு சிட்டம் நூல் கொடுத்தால்போதும் என்று நான் எண்ணினேன். அப்படியானால் தேசம் முழுமைக்கும் 36 லட்சம் சிட்டம் சேரும்.

“நம் தேசத்தில் இத்தனை பேர் நூற்கிறார்களா என்பதே சந்தேகம்தான்” என்று ஒரு சகோதரர் சொன்னார். “நிச்சயமாக இருக்கும், 1930ல் ஒவ்வொரு கிராமத்திலும் தக்ளிநூற்பு மும்முரமாக இருந்தது” என்று மற்றொருவர் சொன்னார். “ஆமாம், அதற்குப் பின் இப்போது ஒரு தலைமுறை கடந்துவிட்டது. ஆகையால் இத்தனை நூல் சிட்டம்சேர அநேகம் பேருக்கு நூற்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்” என்று முதல்வர் சொன்னார்.

நாம் எப்படியாவது நூற்கக்கற்றுக்கொடுத்தேயாகவேண்டும். நூற்கத்தெரியாமல் இந்திய விவசாயி வாழ முடியாது. நான் இப்போது சுற்றுப் பிரயாணம் செய்யும் இந்த இரண்டு மாகாணங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவை. இங்கு உள்ள மக்களுக்கு என்ன தொழில் கொடுப்பது என்ற பிரச்னை எழுந்துள்ளது. இந்த பிரச்னையை நாம் தவிர்க்க விரும்பினாலும் நமது ராட்டை நம்மை இவ்விதம் அசட்டை செய்ய விடாது. இந்த வெள்ளத்தால் இந்த மாகாண ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் திடீரென ஏற்பட்டது. ஆனால் நம் தேசத்திலுள்ள விவசாயிகளுக்கு வருட முழுவதும் வேலையில்லை என்பது நிரந்தரமான துன்பம். ஆகையால் கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும் நூற்கக் கற்றுக்கொடுத்தால் அவர்கள் வாழ்க்கைக்குப் பாதுகாவலாகும் என்பதை சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நான் சர்க்காரிடம் கோரிக்கைகள் போடும் வழக்கமுடையவனல்ல. ஆனால் நான் இந்தக் கோரிக்கைகளை ஜனங்களிடம் செய்ய முடியும். ஏனெனில் ஜனங்கள் என்றால் சர்க்காரும் அதில் அடங்கியதே.

நாம் ஜனங்களுக்கு நூற்கக் கற்றுக்கொடுக்க திட்டமிடும்பொழுது அவர்களை அணுகுவதற்குத் திட்டமிடவேண்டும். இதே பிரச்னைதான் பூமிதான யக்ஞத்திலும் இருக்கிறது. இது மிகவும் பெரியவேலை. இதை எந்த ஸ்தாபனமும் இலகுவில் சாதித்துவிட முடியாது. இதை முழுமனதுடன் செய்யும் முயற்சிதான் சாதிக்க முடியும். இதற்கு யாவர் ஒத்தாசையும் தேவை. இதை பூமிதான யக்ஞ வேலையுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். நிர்மாண ஊழியர்கள் அனைவரும் அதாவது ஆசிரியர்கள், கிராம பஞ்சாயத்து சபையார் உள்பட, நூற்றலில் திறமை பெற வேண்டுவதோடு தினம் நூற்கும் வழக்கத்தையும் கைகொள்ள வேண்டும். இவர்கள் அனைவரும் நூல் காணிக்கை செலுத்துவதிலும் இதை பிறரிடம் கூறிப் பரவச் செய்வதிலும் பங்கு கொள்ள வேண்டும்.

நூல் காணிக்கையே சமுதாயத்தின் சர்வோதயத்திற்கு முதல் காணிக்கை. ★

கர்ணன் சொல் கேளீர்!!

கௌரவர் படைத்தலைமைவகித்து அருச்சுனனுடன் கடும்போர் புரிந்த கர்ணன் தேர்த்தட்டிலே ஆவி நிலைகலங்கி அகத்ததோ புறத்ததோ வென அறியாதிருந்த தருணத்திலே அவன்செய்த தர்மங்களின் புண்ணியப்பலன் அவனைக்காத்து நின்றது. அருச்சுனனுடைய அம்புகள் அவனைக் கொல்ல இயலவில்லை. இந்நிலையில் “நிலையாமை” குறித்து கர்ணன் கூறுகிறான்:-

“இந்த உலகம், இந்த மண், துரியோதனனுக்கும் சொந்தமில்லை; யுதிஷ்டிரனுக்கும் சொந்தமில்லை. இதை இருவருக்கும் கூறு. அருச்சுனா, உன் அம்பை விடு; நான் உயிர்விடத் தயாராகி விட்டேன்.”

மகா ரதனாகிய கர்ணனின் இந்த வார்த்தைகள் நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வியென்னும் பித்த உலகில் நம் வாழ்வுதான் பெரிது என்று எண்ணி இறுமாந்திருப்பவர் கண்களைத் திறக்கட்டும்.

“எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே” என்று முழங்கும் தமிழ்நாட்டில் பிறர் வாழ்வு கெடுத்து தன் வாழ்வு நடத்தும் பொய் வழக்கம் ஒழியட்டும்.

“தனி யொருவனுக் குணவிலையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்” என வீரமுரசு கொட்டிய அமரகவி பாரதிவாக்கின் உள்ளுறை உணர்ந்து, வாடுவோர் துயர் நீக்க, வைத்திருப்போர் வாரி வழங்கட்டும். ★

ஒற்றை மாட்டுச் செக்கு

T. கிருஷ்ணமூர்த்தி.

[தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களிலெல்லாம் கிராமக் கைத்தொழில்கள் செழித்தோங்கவேண்டும்; மக்கள் உணவு உடை விஷயத்திலாவது சுயதேவை பூர்த்தியடைய வேண்டும் என்பதற்காக கிராமோதய கதர் சங்கங்கள் மூலமாகவும், ஆர்வமிக்க அன்பர்கள் மூலமாகவும் கிராமக்கைத் தொழில் கேந்திரங்களை அமைக்க சர்வசேவாசங்கம் முயன்று வருகிறது. கிராமங்களில் ஏற்கனவே உள்ள எண்ணெய் உற்பத்தித்தொழிலை வளர்க்க சர்வசேவா சங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளவர் ஸ்ரீ T. கிருஷ்ணமூர்த்தி. எண்ணெய்ச்செக்கு சம்பந்தமாய் அவர் எழுதிய கட்டுரை கீழே தரப்பட்டுள்ளது. அவர் தமிழ்நாட்டிலும், கேரள நாட்டிலும், எண்ணெய்ச் செக்குகளை கிராமங்களிலும் நிறுவச் செய்து செக்குத்தொழிலாளருக்கு நன்கு வேலைகிடைக்கச் செய்யவே பாடுபடுகிறார். கிராமங்களில் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட விரும்புபவர்களுக்கு அவர் மிகவும் உதவியாக இருப்பார் அவரை வரவழைக்க விரும்புவோர் சஞ்சாலக், அகிலபாரத சர்வசேவா சங்கம், தமிழ் நாடுக் கிளை, காந்திநகர், திருப்பூர் என்ற விலாசத்திற்கு எழுதக் கோருகிறோம்—ஆசிரியர்]

காந்திநகர் ஸ்தாபனத்தைப்பொருத்த வரையில் இங்குள்ளவர்களுக்குத் தேவையான எண்ணெயை இங்கேயே தயாரிக்க எண்ணி முதலில் வார்தாச்செக்கு ஒன்றை நிறுவியுள்ளோம். மார்ச் 26-ம் தேதியிலிருந்து ஒரு நாளைக்கு நான்கு தடவையாக எண்ணெய் எடுக்கப்படுகிறது. சராசரியாக ஒரு தடவைக்கு $2\frac{1}{4}$ படி எண்ணெய் கிடைக்கிறது.

சாதாரணமாக கிராமங்களில் பூர்வ காலந்தொட்டு உள்ள நாட்டுச்செக்கு இரண்டு மாடுகள் பூட்டப்பட்டுள்ளதாக இருக்கிறது. ஆனால் வார்தா செக்கில் ஒரு மாடு மட்டும் பூட்டப்படுகிறது. அத்துடன் செக்கில் உள்ள பாகங்களில் செய்யப்பட்டுள்ள அபிவிருத்திகளால் செக்கை இழுப்பது மாட்டுக்கும் மிகச்சுலபமானதாகிறது. பாகங்களில் ஏதேனும் கெட்டுவிட்டால் அந்த பாகத்தை மட்டும் நீக்கிவிட்டு அதற்குப்பதில் செய்து கொள்ளலாம். இதனால் செக்கும் வெகுநாட்களுக்கு உழைக்கும். வித்துக்களை அரைத்து எண்ணெய் பிழியச்செய்யும் பாகம் நன்றாக உராய்ந்து வரக்கூடிய வகையில் அமைந்துள்ளதால் குறைந்த நேரத்தில் எண்ணெயும் அதிகமாகக் கிடைக்கும் நாட்டுச்செக்கில் மாடுகளை ஓட்டுவதற்கு ஒரு மனிதனும் எண்ணெய் எடுக்க ஓர் மனிதனும் ஆக இருவர் வேலை செய்யவேண்டும். வார்தா செக்கில் பிழியப்பட்ட எண்ணெய் தானாகவே செக்கின் அடியில் உள்ள குழியில் வைக்கப்படும் பாத்திரத்தில் தானாக வந்து விழுவதால் ஒரே மனிதர் இவற்றைக் கவனித்துக்கொள்ளலாம். செக்கின் உலக்கைக்கு மேலே குண்டுகள் உள்ள தாங்கி (Ball Bearing) அமைக்கப்பட்டுள்ளதால் உலக்கையின் அரைக்கும் சக்தி அதிகரிக்கிறது.

அக்டோபர் 12-ம் தேதியிலிருந்து காந்திநகரில் உள்ள செக்கு முழுவேலை செய்கிறது. இதற்கு முன் இருந்த அசௌகரியங்களுக்கிடையிலும் 250 படி எண்ணெய் தயாரித்து விற்கப்பட்டது. திருப்பூரிலுள்ள கதர்வஸ்திராலயத்தில் இப்போது இந்த எண்ணெயும் விற்கப்படுகிறது. சீக்கிரத்தில் காந்திநகரில் இன்னொரு செக்கு அமைக்கப்படும்.

சோப்பு உற்பத்தி.

வேப்பெண்ணெயை உபயோகித்து சோப்பு செய்யவும் சீக்கிரம் காந்திநகரில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது. இப்போது வேப்பெண்ணெய் வாங்கிச்சேர்த்து வைக்கப்பட்டு வருகிறது. இதுவரை நாட்டுச்செக்கிலாட்டிய சுத்தமான எண்ணெயாக கிராமங்களில் நேரிடையாகவே ரூ. 10,089 பெருமானமுள்ள 775 டின் வேப்பெண்ணெய் வாங்கியிருக்கிறது. வேப்பெண்ணெய் தயாரிப்பவர்களுக்கும் இது ஓர் உற்சாகத்தை ஊட்டக் கூடிய விஷயம்.

சோப் நம் நாட்டில் வாழ்க்கைக்கு அநேகமாய் இன்றியமையாத பொருளாகிவிட்டது. ஆனால் குவியல் முறையிலே சோப்புச்செய்யும் கம்பெனிகள் உணவுக்கு உபயோகப்படும் எண்ணெய்களைத் தான் சோப் செய்ய உபயோகிக்கின்றன. இதனால் உணவுப்பொருள் வீணாகிறது என்று கருதி உண்ணத்தகாத எண்ணெய்களில் (Non-edible Oils) சோப் செய்யவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தாரும் தமக்கு வேண்டிய சோப்பைத் தயாரித்துக் கொள்ள இயலவேண்டும்; அல்லது குறைந்தபக்ஷம் அந்தந்த கிராமத்துக்கு வேண்டிய சோப் அங்கேயே தயாராகவேண்டும் என்பதற்காக பரிசோதனை செய்யப்படுகிறது.

அமரர்களுக்கு அஞ்சலி.

மத்தியப் பிரதேச பூமிதான யக்ஞக் கமிட்டி கன்வீனர் தாதாபாய் நாயக் அவர்கள் கால்நடையாக யாத்திரை சென்று கொண்டிருந்தார். யாத்திரைகோஷ்டியில் டாகூர் பியாரிலால் சிங் என்ற முக்கிய ஊழியர் ஒருவரும், குமாரி ஷாந்தா டோங்ரே என்ற ஒரே பெண்மணியும் இன்னும் சிலரும் இருந்தனர். குமாரி ஷாந்தா ஒரு B. A., பட்டதாரி. கடந்த 10, 11 மாதங்களாக பூமிதான யாத்திரையில் கலந்துகொண்டு வினோபாஜியுடன் கயா ஜில்லாவில் பூமிதான யக்ஞத்தில் அரும் பணியாற்றியவர். மத்திய பிரதேசத்தில் செப்டம்பர் 11-ந் தேதியிலிருந்து இடைவிடாது அகண்ட யாத்திரை செய்துவந்தார்.

அக்டோபர் 20-ந் தேதியன்று ஜபல்பூரில் டாகூர் பியாரிலால் சிங் பூமிதான யக்ஞத்தில் தம்முடைய ஆத்மாவை பூரண ஆஹூதி செய்துவிட்டார்.

நவம்பர் 13 தேதியன்று குமாரி ஷாந்தா டோங்ரேயும் மாரடைப்பினால் ஆத்ம சமர்ப்பணம் செய்துவிட்டார்.

பூமிதான யக்ஞத்தில் இந்த இரண்டு ஊழியர்களும் பாரதமாதாவின் சரணாரவிந்தங்களில் தங்கள் ஜீவனை இயக்கத்திற்காக அர்ப்பணித்ததன் மூலம் இவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டனர் இவர்களுக்கு நமது அஞ்சலி உரித்தாகுக.

பூமிதானப் புரட்சியின் சரியான சோதனை

— வினோபாஜீ —

சுயராஜ்யம் அடைந்த பிறகு பொருளாதார சமூக, சுதந்தரமும் சமத்துவமும் அடைவதற்கான சரியான வழி எதுவென்றும் அதை தேசம் முழுவதும் எப்படி பரப்புவது என்றும் தெரியாமல் இருந்தது. கடவுளின் அருளால் பூமிதான இயக்கம் நமக்கு கிடைத்தது. அதன் காரணமாக நமது பாரத தேசத்தின் சமூகத்துறையிலும், ஆத்மீகத் துறையிலும் அநேக புதிய கருத்துக்கள் பரவி வருகின்றன. எந்த இயக்கமும் நடைமுதல் வாழ்க்கை முறையில் எவ்வளவு மாறுதல்களைச் செய்திருக்கிறதோ, செய்ய உத்தேசித்திருக்கிறதோ அவைகளைக்கொண்டுதான் அந்த இயக்கத்தின் சக்தியையும் நாம் மதிப்பிடவேண்டும். நடைபெற்றிருக்கும் வேலையின் அளவினால் மட்டும் இது முடியாது.

இயந்திர யுகத்தில் கால் நடை யாத்திரை.

பூமிதானத்திற்காக கால் நடையாக யாத்திரை செய்கிறோம். இதை பார்க்கும் பொது ஜனங்களுக்கு ஒருவிதமான எழுச்சி ஏற்படுகிறது. இது புதிய விஷயமல்ல பண்டைகாலந்தொட்டு நடந்து வருவதுதான். அக்காலத்தில் ரயில், மோட்டார் முதலிய வாகனங்கள் கிடையாது. தற்சமயம் இவ்வளவு வசதிகள் இருந்தும் கால் நடையாக நடப்பதினால் ஏற்படக்கூடிய சக்தி அந்தக் காலத்தில் ஏற்பட்டதில்லை. இதனால் நாம் ரயில், மோட்டார் முதலியவைகளை வெறுக்கிறோம் எனக் கருதக்கூடாது. அவைகளின் ஆதாரத்தின் பேரில் நாம் வேலை செய்வதில்லை என்பதுதான் பொருள். நவீன சாதனங்களின் ஆதாரத்தின் பேரில் வேலை செய்தால் அந்த வேலை முதலாளிகளின் கைக்கு மாறிவிடும். ஏனென்றால் அந்த சாதனங்கள் எல்லாம் அவர்களிடத்தில்தான் இருக்கின்றன. எனவே ஏழைகளுக்கு சுலபமாகக் கிடைக்கக்கூடிய சாதனம் வேண்டும். அது கால்நடையாகத்தான் இருக்கமுடியும். நான் சென்ற இரண்டரை மாதங்களாக உள்நாட்டில் யாத்திரை செய்து கொண்டிருக்கிறேன். இது சமயம் என்னைப் பார்க்க விரும்பும் நகர வாசிகள் என்னைப் பார்க்க முடியவில்லை எனவே இந்த சாதனையை எவ்வளவு யந்திர சக்தியுள்ளவர்களாலும் சாதிக்கமுடியாது. ஆனால் ஒரு கிராமவாசி எவ்வளவு எளியவனாக இருந்தாலும், எந்த சிரமத்தையும் பொருட்படுத்தாமல் நடந்து வந்து சேருவான். எனவே கால் நடைதான் ஏழைகளுடையதும், பொது மக்களுடையதுமான சாதனம். இதர வாகனங்களையும் நாம் உபயோகிக்கலாம் ஆனால் அவைகளுக்கு முக்கியத்துவம் கிடையாது. நம்முடைய ஆதாரம் கால் நடையின்பேரில்தான் இருக்கவேண்டும். பூமிதான இயக்கம் ஆரம்பமாவதற்கு முன்னால் இவ்வளவு ஆயிரம் மைல்கள் கால்நடை யாத்திரை நடைபெறக்கூடுமென்று யாராவது கற்பனையில் கூட நினைத்ததுண்டா? ஆனால் நீங்கள் காண்பதென்ன? பூமிதான இயக்க ஊழியர்கள் நடத்திய கால் நடை யாத்திரை மாதிரி இந்த நூற்றாண்டிலும் சரி சென்ற நூற்றாண்டிலும் சரி எந்த இயக்கத்திலும் நடைபெற்றதில்லை. இந்த இயக்கத்தின் காரணமாக, குழந்தைகளும், சிறுவர்களும்கூட கிராமம் கிராமமாகச் சுற்றுகிறார்கள். ஒரு புதிய சக்தியின் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனக்கு வெளியுலக சமாச்சாரம் கிட்டுவதில்லை. ஆனால் இதனால் பொதுமக்களுக்கு என்ன நஷ்டம்? அவர்களுக்கு கிடைக்கும் சமாசாரங்கள்தான் என்ன? மேலெழுந்தவாரியாக சில பிரசங்கங்களும், கட்டுரைகளும் இருக்கின்றன. உண்மையில் சமாசாரங்கள் கிராமங்களில் இருந்துதான் கிளம்புகின்றன. இந்தக் கருத்துக்கள் எல்லாம் இந்த இயக்கத்தின் மூலம் கிராமவாசிகளுக்கு ஏற்படுகின்றன.

பொதுஜன பாஷை விருத்தியடைகிறது.

இந்த இயக்கத்தின் காரணமாக தாய் பாஷையும், தேசிய பாஷையும் வளர்ச்சியடைகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் பிரசங்கம் செய்யப்படுகிறது. அவ்விடங்களின் உள்ளூர் மொழிகளிலும் பிரசங்கம், கவிதைகள் புனையப்படுகின்றன. இதனால் பிரதேச பாஷைகளும் வளம் பெறுகின்றன. செயற்கையான ஒரு பாஷை பொது மக்களிடையே திணிக்கப்படுவதில்லை. உள்ளூர் பாஷையே முன்வந்து ஜன சக்தியை எழுப்பி விடும். ஜனங்களுடைய பாஷையில் அவர்களிடையே பேசமுடியாத ஊழியர் தன்னை சக்தியற்றவராகவே கருதுவார்.

ராமாயணத்தைப்போலவே ஒவ்வொரு வீட்டிலும் பரவவேண்டும்.

நாம் ஜனங்களிடையே பேசும் சில விஷயங்களினால் இயக்கத்தின் சோதனை ஏற்படுகிறது. இவ்வியக்கத்தில் கிராமத்தின் சக்தியைப் பற்றியும், அவர்களுடைய கருத்துக்களைப் பற்றியும் சர்ச்சை செய்யப்பட்டிருக்கிற மாதிரி இதற்கு முன்பு எப்பொழுதுமே செய்யப்பட்டதில்லை. கிராம ஜனங்கள் சிந்திக்கத் தொடங்கினர். கிராம முன்னேற்றம், சீர்திருத்தம் முதலியன தங்களாலேயே நடைபெற வேண்டும் என்று உணர ஆரம்பித்திருக்கிறார்கள். பொது மக்களின் கவனம் இது பற்றி இழுக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளிலும், இந்த சர்ச்சை நடைபெறுவதில்லை. இது புரட்சியின் காரியம். இதைப் பற்றி அதிகப்படியாக பத்திரிகைகளில் வந்தால் பாதகம் ஏற்படலாம். ஆகையினால்தான் அதிகம் வருவதில்லை. இதைப் பற்றி நான் ஒன்றும் வருந்தவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகள் முதற்கொண்டு "எங்கள் கிராமத்தில் நிலமற்றவர் இருக்கக்கூடாது" என்று கோஷிக்கத் தொடங்கிவிட்டனர். பீஹாரைப் பொறுத்தமட்டில் மிகக் குறைந்த சிலரே இதைப்பற்றி சிந்திப்பதில்லை. ராமாயணத்தைப் போலவே ஒவ்வொரு வீட்டிலும் கிராம முன்னேற்றம் விவாதிக்கப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு தங்களுடைய சக்தி எப்பொழுது புலனாகிறதோ அப்பொழுதே இந்தப் பிரச்னை வெகு எளிதில் தீர்க்கப்படுவதை நாம் காண்போம்.

நம்மைப் பிணைக்கும் கருத்து

இப்பொழுது "ஜீவன் தான்" பற்றிய பேச்சு எழுந்திருக்கிறது. முன் நடைபெற்ற இயக்கத்திலும் மக்கள் ஜீவன் தானம் செய்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது தோன்றி இருப்பது முற்றிலும் ஒரு புதிய கருத்து. நான் இவர்களை ஜீவன்-தானி என்று அழைக்காமல் "ஜீவன் சாதகர்கள்" என அழைப்பேன். இவர்களுக்கு எந்தவிதமான பந்தமும் கிடையாது. முன்காலத்திய சாதுக்கள்

(தொடர்ச்சி 150-ம் பக்கம் பார்க்க)

கிராமோதயம்

டிசம்பர் 1 **** 1954.

பட்டினி வேண்டாம்

அகில இந்திய கதர் கைத்தொழில் போர்டாரால் புனாவில் நடத்தப்பட்ட ஒரு மகாநாட்டில் பேசும்பொழுது ராஷ்டிரபதி ராஜேந்திரபிரசாத் அவர்கள் கதருக்கும், கிராமக் கைத்தொழிலுக்கும் ஆதரவு தரவேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டு இத்துறைகளில் பெரிய தொழில்கள் இறங்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

"சர்க்கரைக்கும், எஃகுத் தொழிலுக்கும் பாதுகாப்பளித்து ஏராளமான நிதி உதவி செய்திருக்கும் பொழுது லக்ஷக்கணக்கான ஜனங்கள் நன்மையடையக் கூடிய கிராமக் கைத்தொழிலுக்கும் சர்க்கார் அதே அளவில் ஏன் உதவக்கூடா"தென்று கேட்கிறார்.

ஜனங்கள் அனைவரும் சுபிட்சமான வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்க வேண்டும். குவியல் முறையில் தொழில்கள் நடத்தப்படும் வரையில் பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்கவோ, வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவோ வழியில்லை. ஆகவே நம் நாட்டின் நிலைக்குகந்தது கிராமக்கைத்தொழில் வளர்ச்சி தான் என்ற சொல்லை மகாத்மா காந்தியடிகள் வற்புறுத்தி வந்துள்ளார். சிந்தனையாளர்கள் இந்த முடிவுக்கே வருவார்கள்.

"கிராமக் கைத்தொழில்களில் உற்பத்தியாகும் சாமான்களின் விலை அதிகமாயுள்ளது. அதை எப்படி வாங்க இயலும் என்று உதாசீனமாகக் கூறுபவர்களுக்கு ஸ்ரீ பிரஸாத் அவர்கள் நன்றாகப்பதிலளித்திருக்கிறார்.

'பெரிய தொழில்கள் மலிவாக உற்பத்தி செய்யும் சாமான்களை கிராமக் கைத்தொழில்கள் மூலமாக உற்பத்தி செய்வது அவசியமில்லை' என்பவர்களின் வார்த்தை அர்த்தமற்ற வாதம் என்று ஒதுக்கி "சில பொருள்களுக்கு அதிக விலையாகிறதென்று நாம் யோசிப்போமானால் லக்ஷக்கணக்கானவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் பட்டினியுமே மிச்சமாகும். ஆகவே நமக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வேண்டுமா அல்லது சில பொருள்களின் விலை உயர்ந்தபோதிலும் அனைவருக்கும் சுபிட்சம் வேண்டுமா? எந்த அறிவுள்ள மனிதனும் வேலையில்லாத் திண்டாட்டத்தை விரும்பமாட்டான். பொருள்களின் விலை கூடினாலும் அனைவருக்கும் வேலை கிடைப்பதையே விரும்புவான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பரம்பரையாக கிராமங்களில் எண்ணெய் ஆட்டுதல், இரும்பு வேலை, வெல்லம் காய்ச்சுதல், முதலிய தொழில்களால் ஏராளமான தொழிலாளர் சுபிட்சமாக வாழ்ந்து வந்தனர். கிராமத்தின் செல்வமும் பலரிடம் பரவி நின்றது. வறுமையில்லாமல் மக்கள் வாழ்ந்தனர். ஆனால் குவியல் முறை உற்பத்தி கிராமத் தொழிலுக்குப் போட்டியாக வந்து அவற்றில் பலவற்றை அழித்துவிட்டது. மீதியிருக்கும் தொழில்களும் குற்றுயிராக உள்ளன.

காந்தீயப் பண்பிலே தலைசிறந்தவர்களில் ஒருவரான நமது ராஷ்டிரபதி அவர்கள் கூறியுள்ள வார்த்தை கிராமத் தொழிலாளருக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும். அவர்களை சர்க்கார் காப்பாற்ற முன்வருகிறார்கள் என்றால் தமது வேலையில் தீவிர கவனம் செலுத்துவர்.

முதலில் உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், கிராமத்தில் எண்ணெய் உற்பத்தியும் வெல்லம் தயாரித்தலும் பெருக எண்ணெய், வனஸ்பதி மில்களைக் கட்டுப்படுத்தவும், உடையைப் பொறுத்தவரையில், கதர் அபிவிருத்திக்கு ஆதரவாக துணி, நூல் மில்களைக் கட்டுப்படுத்தவும் சர்க்கார் முன்வருமானால் கிராமக் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு உண்மையிலேயே சர்க்கார் தமக்கு உதவி செய்கிறது என்ற நம்பிக்கை பிறக்கும்.

நில உரிமை நீங்கட்டும்

அமிருதசரஸில் பஞ்சாப் குடியானவர்கள் கூட்டம் ஒன்றில் பேசிய மத்திய சர்க்கார் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் நில உடைமைக்கு வரம்பு கட்டும் கொள்கையிலிருந்து சர்க்கார் மாறப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

நில உடைமை என்பது சரித்திர பூர்வமாக சமீப கால சம்பவம். ஆங்கில கம்பெனியார் ஆட்சி நடத்திய காலத்தில் வரிவசூலுக்கு சாதகமாக இருக்கும் பொருட்டு செய்யப்பட்ட ஏற்பாடு. இதை உலகம் தோன்றிய காலமுதலாக உள்ள ஏற்பாடாக மக்கள் நினைத்து உடைமைக்கு உரிமை கொண்டாடுவது காலத்தின் கோலமே.

உழைப்பவர் உணவுக்கு ஏங்கி நிற்கையில் ஊரில் உள்ள நிலமனைத்திற்கும் உரிமையாளர் என்று சிலர் திரிவது கூடாது என்பதே பூமிதான யக்ஞத்தின் கொள்கை. "நிற்கத் தரையில்லாத போது மேற்கூரைபற்றிய பேச்சால் பயனில்லை" (When there is no footing what is the use of ceiling) என்பது வினோபா பாவே அவர்கள் கருத்து.

இப்படி உண்மையிருப்பினும், தம்முடைமையாகக் கருதும் நிலங்களை பகிர்ந்து தம் உறவினர் பெயரால் பட்டாச் செய்துகொண்டு வரப்போகும் சட்டத்திற்கு டிமிக்கி கொடுக்கும் முயற்சியில் இப்போதே பலர் ஈடுபட்டுவிட்டனர்.

ஆகவே நேரடியாய் நிலத்தில் உழுது பாடுபடுபவர்களுக்குத்தான் நிலத்தின் உரிமை கொடுக்கப்படும் என்று சர்க்கார் கொள்கை வகுத்துக்கொள்ளாதவரை இந்த இடைக்கால ஏற்பாடுகள் கோரிய பலனைத் தர இயலாது.

மக்கள் உள்ளத்தில் நில உடைமை பற்றிய அபிப்பிராயம் மாறிவிட்டது. நிலம் சமுதாய சொத்தாக வேண்டும் என்ற அபிப்பிராயத்தை பூமிதான யக்ஞம் மக்களுடைய மனதிலே நன்கு பதியவைத்துவிட்டது. ஆகவே உடைமையாளர்கள் தங்களால் நேரடியாய் பயிரிடக்கூடிய அளவு நிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதிகமாய் உள்ள நிலத்தையெல்லாம் மக்களின் நலத்துக்காக தானம் செய்துவிடுவதே விவேகமான செயலாகும்.

அ. பாலகிருஷ்ண பிள்ளை

3-JAN 1956

எல்லோரும் தாருங்கள்

"குன்றம்"

பூதான யாத்திரையாக நாங்கள் சென்றபோது ஒரு கிராமத்திலே "வேலி, வேலியாக நூற்றுக்கணக்கில் நிலம் வைத்திருப்பவர்கள் அல்லவா பூதானத்துக்கு நிலம் தரவேண்டும். இந்த ஊரில் எவரிடம் அப்படி நிலம் இருக்கிறது. ஆகையினாலே பூதான யக்ஞத்துக்கு இங்கிடமில்லை. நீங்கெல்லாரும் வந்திருக்கிறீர்கள். நன்றாக சாப்பிடுங்கள், பொதுக்கூட்டம் வேண்டுமென்றாலும் போடுவோம். நன்றாக மணிக்கணக்கில் பேசுங்கள். அவ்வளவுதான்" என்று மூச்சு விடாமல் பேசி முடித்தார் ஒருவர். இன்னொருவர் "ஆமாம், ஐயா அவுக சொல்லுறது வாய்த்தவங்தானே" என்று ஆமோதிக்கும் பாணியில் ராகமிழுத்தார். மற்றொருவர் "ஐயா சொல்லுக்குத் தன்னன்னாப்போட்டு விட்டீர்களே! ஐயா கிட்ட என்ன, நிலத்துக்குப் பஞ்சமா? அவுக கிட்டே முன்னூறு ஏக்கராவது இருக்காது?" என்று டபார் என்று ஒரு போடு போட்டார், முறைப்பாக அவரை ஐயா பார்த்த பார்வையிலே, முடிந்தால் அப்படியே விழுங்கிவிடுவார்போல இருந்தது. ஐயா முக்கியஸ்தராக இருந்ததால் கௌரவத்தை முன்னிட்டு கிளம்பாமல் அங்கேயே இருந்தார். "ஏதோ அவ்வளவு நிலம் என்னிடமில்லாவிட்டாலும் நான் தருகிறதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மற்றவர் யாரிடம் கேட்க லாயக்கிருக்கிறது என்றுதான் சொல்லவந்தேன்" என்று நிலைமையை ஒருவாறு சமாளித்துக்கொண்டார் ஐயா அவர்கள்.

இதுதான் தக்க தருணமென்று எங்கள் வேலையை ஆரம்பித்தோம். அங்கு கூடின ஒவ்வொருவரும் நிலம் தரவேணுமென்று கேட்டுக்கொண்டோம். ஒருவர் மற்றவர் முகத்தைப் பார்க்கவும் எங்களைப் பார்க்கவுமாக சில நிமிஷங்கள் கடந்தன. மூன்றாவதாகப் பேசியவர் மெதுவாக எழுந்திருக்கப்பார்த்தார். நாங்கள் அவரையா விடுவது? "ஐயா, தாங்கள்தான் முதன்முதலாக உத்தரம் சொல்லவேணுமென்று தாழ்மையாக விண்ணப்பித்துக்கொண்டோம்." எங்கிட்ட என்னையா இருக்குது ஏதோ பத்தேக்கர் சாகுபடி 'செய்துக்கிட்டிருக்கேன், என்னைப்போட்டு.........." என்று அவர் இழுக்கலானார். அங்கிருப்பவர்கள் இனி அவரை சும்மா விடுவார்களா? "இருபத்தைஞ்சு ஏக்கர் வைச்சிருக்காரையா இவரு!" என்று சொல்லிக்கொண்டே எங்களைப்பார்த்தார்கள். "ஒரு ஏக்கர் வைத்திருக்கவர்களிடமே நாங்கள் பூதானம் கேட்கிறோமே, 25 ஏக்கர் வைத்திருக்கும் தாங்கள் நிச்சயமாக நிலம் கொடுத்தாக வேண்டியதுதான்" என்று அழுத்தமாகவே சொன்னோம். "அப்படின்னா நான்கூட நிலம் கொடுக்கணுமா?" என்று கூட்டத்தில் வேறு ஒரு குரல் கேட்டது. "நிலமுள்ள எல்லோரும் நிலம் தந்தாகவேண்டியதுதான்" என்று பதிலளித்தோம்" இது என்னையா நியாயம், நிலமில்லாதவங்களுக்கு நிலம் கொடுக்கப் போறோம் என்று சொல்லிப்போட்டு அவனுக்கே காணாதபடி நிலம் கொஞ்சம் வைச்சுக்கிட்டு பாடுபடறவன்கிட்டக்கூட நிலம் கேக்க ஆரம்பிச்சுட்டீங்க!" என்று நாலைந்துபேர்கள் எங்களை வளைத்துக்கொண்டார்கள்.

பூதான இயக்கம் என்றால் அதிக நிலம் படைத்தவர்தான் நிலம் தரவேண்டும், மற்றவர் வேண்டாம் என்ற அபிப்பிராயம் எங்கும் நிலவி வருகிறது. பூதான இயக்கம் ஏதோ நன்கொடை வசூலித்து ஒரு விழாவையோ, தர்மத்தையோ நடத்தி முடித்துவிடுகிற காரியமல்ல. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது நிலத்தை லட்சம் ஏக்கர் கணக்கில் வசூல் செய்து நிலமில்லாத ஏழைகளுக்கு விநியோகிக்கும் திட்டம் இதுஎன்ற அளவுக்குத்தான் தெரியவரும். இன்றைய உலகைப் பீடித்திருக்கிற கொடும் வியாதியைத் தீர்க்க முற்பட்டிருக்கிறது இவ்வியக்கம் என்பது சற்று நிதானமாகச் சிந்தித்தால் விளங்கும். உலகில் எங்கு பார்த்தாலும் அதிகாரவேட்டையும், பதவிப்போட்டியும் பேராசையும் தலைவிரித்தாடுகிறது. பணக்காரன் ஏழையைத் துச்சமாக நினைக்கிறான். சமூகத்தில் பணம் படைத்தவர்களுக்குத்தான் மதிப்பு. அவன் எவ்விதப் பாதகச் செயல் புரிந்து பணம் சேர்த்திருந்தாலும் பரவாயில்லை. ஆனால் ஏழையாக இருந்தால் அவன் எதற்கும் லாயக்கில்லை என்றாகிவிட்டது. நாணயமுள்ள, நேர்மையான, நற்குணம் படைத்தவனாக அவன் இருந்தாலும், அவனுக்கு சமூகத்தில் மதிப்பு, கௌரவம் இம்மிகூட இல்லை. இந்த நிலையிலே அவன் என்ன நினைக்கிறான். தானும் பணக்காரனாகிவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும், எத்தனையோ சௌகர்யங்களை அடைவதோடு கௌரவமும், செல்வாக்கும் தனக்கு வந்து சேரும் என்று அவன் ஆசைப்படுகிறான். சிறிதுகூட அவனுக்கு வாழ்க்கையிலே நம்பிக்கை இல்லாது போய்விடுகிறது; 'ஏழையாக இருக்கும் வரைதான் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத ஒரு முடம்' என்று கருதுகிறான். நாளடைவில் பணக்காரர்பால் பொறாமை கொள்கிறான். தன்னைப்போல் உழைத்துப் பணத்தையோ, சொத்தையோ சேர்க்காத சிலரின் ஏகபோக வாழ்க்கையைக் கண்டு ஏங்குகிறான். ஆகையினாலே அவன் பணக்காரர்களுக்கு 1-ம் நம்பர் எதிரியாக மாறுகிறான். இப்படியாக சமூகத்தில் — நாட்டில் — குழப்ப விதை முளைக்க ஆரம்பிக்கிறது.

மற்றொருபுறம் பணக்காரனும் என்ன நினைக்கிறான். பணம்தான் தனக்கு எல்லாவற்றையும் தேடித் தந்திருக்கிறது, அது இல்லாவிட்டால் தனது அந்தஸ்து, கௌரவம், எல்லாவற்றிற்கும் மேலாக சௌகரியங்கள் எல்லாம் அடியோடு தொலைந்துவிடும் என்று மேலும் மேலும் பணத்தையோ, சொத்தையோ சேர்க்க ஆரம்பிக்கிறான்.

இப்படியாக ஏழை, பணக்காரன் இரு வர்க்கங்களிடையேயும் பணம் சேர்க்கும் முனைப்பு காணப்படுகிறது. பணம் சேர்க்க இயலாத பலர்தான் ஏழையாக இருக்கிறார்கள். அதற்கு சந்தர்ப்பந்தான் வேண்டும்; அதுதான் பலருக்குச் சிக்குவதில்லை. ஆகையினாலே இந்த முனைப்பை முதலில் மழுங்கவைக்க வேண்டும். பணக்காரனையும், ஏழையையும், 'இந்த பணம் அல்லது சொத்துச் சேர்க்கும் ஆசையை தவிர்த்துவிடு என்று அறைகூவி அழைக்கிறது பூதானயக்ஞம். 'பணக்காரனாக ஆசைப்படாதே, நீயும் அவனைப்போல் கெட்டுவிடுவாய்' என்று ஏழையை எச்சரிக்கை செய்கிறது அது. ஆசையைத் தவிர்ப்பதற்கு அடையாளமாகத்தான் சிறிய நிலச்சுவான்தார்கூட தனது உடமையை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார் விநோபாஜி.

(தொடர்ச்சி 150-ம் பக்கம் பார்க்க)

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஒரு கிராமத்தில் 40 விவசாயக் குடும்பங்கள் உள்ளன என்று வைத்துக்கொள்வோம். அவர்களில் 25 குடும்பங்களுக்கு 100 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கின்றன என்றால் ஒரு குடும்பத்துக்கு 4 ஏக்கர் நிலமே சராசரி வரும். மீதி 15 குடும்பங்களுக்கு நிலம் வேண்டுமே அதற்கு என்ன வழி. சுற்றுவட்டாரத்திலுள்ள கிராமங்களில் சேர்க்கப்பட்ட நிலமனைத்தும் அங்கங்கேயுள்ள நிலமில்லாதவர்களுக்கு சரியாய்விடும். இந்த கிராம விவசாயியை 100 மைலுக்கு அப்பாலுள்ள கிராமத்துக்கு அனுப்ப முடியாது. அங்கேயும் நிலமில்லாதோர் வேண்டிய அளவு இருக்கவே செய்வார்கள். ஆகையினாலே மேலே குறிப்பிட்ட 25 குடும்பத்தாரிடமுள்ள நிலங்களிலிருந்துதான் மீதி 15 குடும்பங்களுக்கும் தரவேண்டும். முன் சொன்னவர்கள் எங்களிடம் 4 ஏக்கர்தானே உண்டு, இதிலிருந்து எப்படி நிலம் விட்டுக்கொடுப்பதென நினைக்கக்கூடாது. தங்களைச் சுற்றி எங்கு பார்த்தாலும் நிலமில்லாத விவசாயி இல்லை என்றாகிவிட்ட பிறகு இந்தக் கிராமத்தில் மட்டும் நிலம் வைத்திருப்பவர் பிடிவாதம் பிடிக்க இயலாது. ஆகையினால் இவர்கள் நிலம் விட்டுக்கொடுப்பதவசியம்.

ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர் 10 செண்டு அளித்தால் அது அவ்வூரிலுள்ள பெரிய நிலச் சொந்தக்காரரிடமிருந்து நிலதானம் பெற அடிகோலுகிறது. அவ்வேழையே நிலம் கொடுக்கும்போது தான் எப்படி சும்மா இருப்பதென்று அவருக்குத் தோன்றும். அதோடு இவர் பூதானம் செய்யாதது ஊருக்குத் தெரிந்தால் பலரும் ஏளனமாகப் பேசலாம் என்றும் அவர் அஞ்சுவார்; நிலம் தர முன்வருவார்.

சொத்துரிமையே எடுபட வேண்டுமென்பதே பூதான யக்ஞத்தின் கருத்து. தனித்தனிப் பட்டா போடும் உரிமை இருக்கக்கூடாது. ஊரிலுள்ள நிலமெல்லாம் ஊருக்குச் சொந்தமாக வேண்டும். பொதுவாக எல்லோரும் பாடுபட்டுப் பலனைப் பகிர்ந்துகொள்ளல் வழக்கமாக வேண்டும். கிராமம் கிராமமாக பூதான யக்ஞத்துக்கு நிலம் அளிக்கப்பட்டிருப்பதை பத்திரிகை பார்ப்பவர்கள் அறிவர். இந்நிலைமைக்கு வழி வகுப்பதற்காகவே ஏழை நிலச்சுவான்தாரும், பணக்கார நிலச்சுவான்தாரும் நிலம் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

நிலம் என்பது உழைப்புக்குச் சாதனமாகக் கருதப்பட வேண்டும். இப்போது அது முதலீடாகக் கருதப்படுகிறது, வழக்கத்திலும் அப்படித்தானிருக்கிறது. எப்படி பேனா எழுதும் சாதனமோ, எப்படி ஏர், கலப்பை எல்லாம் உழுவதற்கு சாதனங்களோ, அதேபோல நிலமும் பயிரிடுவதற்கு ஓர் சாதனம் ஆக வேண்டும். அதற்கு அதன் சொத்து மதிப்பை அழிக்கவேண்டும். பகிர்ந்து கொடுக்கப்பட்ட நிலத்தை நிலம் பெற்றவர் விற்கவோ, வேறு எந்தவித பராதீனம் செய்யவோ உரிமை கிடையாது. பாடுபட்டு கிடைக்கும் பலனை அவர்கள் அனுபவிக்கலாம் என்பதுதான் தத்துவம். இந்தத் தத்துவத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று எல்லா நிலச்சுவான்தார்களும் கோரப்படுகிறார்கள். அவரவர் சொத்தில் ஒருபகுதி பூதானத்துக்குக் கொடுக்கும்போது தனது உரிமையையும் அதன் ரொக்க மதிப்பையும் இழக்கிறார் என்பது அர்த்தம். இந்தவிதமாக கொஞ்சம் கொஞ்சமாக தனது உடைமையை விட்டுக்கொடுத்துப் பழகினால்தான் மனித உள்ளம் வருங்காலப் புரட்சிக்குத் தயாராகும் என்பதே பூதான யக்ஞத்தின் குறிக்கோள்.

இப்புனித இயக்கம் ஏழையின் நன்மைக்காக நடக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் அடையாளமாக சாதாரண நிலச்சுவான்தார்களும், தங்களை ஒருபடி உயர்த்தி வருங்காலத்துக்கு தயார் செய்கிறது இவ்வியக்கம் என்றுணர்ந்து பெரிய நிலச்சுவான்தார்களும் பூதான யக்ஞத்துக்கு நிலம் தரவேண்டியது சாலச் சிறந்த கடமையாகும்.

★

(147-ம் பக்கத் தொடர்ச்சி)

முனிவர்களைப் போல ஜீவன் சாதகர்களின் கூட்டம் அமையவேண்டும். முன் காலத்தில் இருந்த நல்லவைகள் இதில் இடம் பெறும். கெட்டவைகள் அல்ல. இதில் யாரையும் சிக்கவைக்கும் நோக்கம் கிடையாது. எல்லோரையும் பிணைக்கும் நூல் சங்கத்தின் அமைப்பாக இராமல், கருத்து ஒற்றுமையாகத்தான் இருக்கும். இவ்விதமான சங்கம் ஏற்படுவது ஒரு பெரிய காரியம். ஜீவன்தானிகள் ஒரே தரத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் ஒரு மகத்தான கருத்து உண்டாயிற்று. அதற்கு உரிய மதிப்பை நாம் கொடுக்கிறோம். பொது நலனுக்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்ற சிறந்த நோக்கம் ஒரு மகத்தான செய்கையே.

சம்பத்திதான இயக்கத்தைப் பற்றி சற்று சிந்தியுங்கள். முன்பெல்லாம் நிதிகளுக்குப் பணம் வசூலிக்கப்பட்டு ஒரு இடத்தில் வைத்து அதற்கு கணக்குகள் முதலியன எழுதப்பட்டு வந்தன. அதை செலவு செய்வது குறிப்பிட்ட நிர்வாகஸ்தர்களுடைய வேலையாக இருந்தது. பொதுமக்களுக்கு அதில் பங்கு கிடையாது. ஆனால் சம்பத்திதானத்திலோ பணம் கொடுப்பவரிடமே இருந்து வருகிறது. அவர் சமூகத்தின் நன்மைக்காக நம்முடைய உத்தேசப்படி செலவுசெய்து வருவார். இம்முறையினால் நிதி திரட்டுவதில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருப்பதைக் காண்பீர்கள்.

புரட்சியின் தோற்றம்

ஒரு புரட்சியைப் பற்றி எவ்வளவுதான் புகழ்ந்தாலும், அதனால் சமூக அமைப்பில் உள்ளும், புறமும் எவ்வளவு மாறுதல் செய்ய முடியுமோ அதைப் பொருத்துத்தான் அதன் சக்தி மதிப்பிடப்படும். தங்களுடைய வளமான பிரதேசத்தில் நான் இரண்டு வருஷங்களுக்கதிகமாக இருந்திருக்கிறேன். நான் குறிப்பிட்ட காலம் முடிந்துவிட்டது. இங்குள்ள ஊழியர்களிடம் இருந்து நான் அதிகம் எதிர்பார்க்கிறேன். அவர்கள் பூமிதான இயக்கத்திற்கும், மற்றுமுள்ள நல்ல வேலைகளுக்குமிடையே உள்ள அடிப்படையான வித்தியாசத்தை நன்கு உணரவேண்டும். இவைகளை நன்கு உணருவதால் அதிகப்படியான உற்சாகம் ஏற்படுகிறது. இதே வேலையில் தன்னை மறந்து வேலை செய்யக்கூடிய அளவு உற்சாகம் நிரம்பி இருக்கிறது. இவ்வியக்கத்தைப் பற்றி நன்றாகப் படித்து சிந்தனையும் செய்யவேண்டும். இது விஷயத்தில் போதிய அளவு நடைபெறவில்லை என்பது சிந்தனைக்குரிய விஷயமாகும். ஊழியர்கள் இவைகளைப் பற்றியும் யோசித்து, தங்களுக்கு இடப்பட்ட கோட்டாவையும் கூடிய விரைவில் பூர்த்தி செய்துவிடுவார்கள். உழைப்பினாலும் அன்பினாலும் இங்குள்ள வேலை மிக எளிதில் பூர்த்தி அடைந்துவிடும் என நான் நம்புகிறேன்.

15-10-54 *ஜீவச்பூர் (பிஹார்)*

ஸ்ரீமதி விமலா தக்கரின்
பூமிதான யாத்திரை வெற்றி
546 பேர் 2135 ஏக்கர் நிலதானமளித்தனர்

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் தமிழ்நாட்டில் செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் 27 நாட்கள் சுமார் 250 மைல்கள் நடந்து யாத்திரை செய்தார்கள். 89 கிராமங்களில் பூமிதானக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. 546 பேர் 2135 ஏக்கர் தானம் செய்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் பூமிதானச் செய்தியைக் கேட்டனர். மழைகாலமாகையால் செங்கற்பட்டு ஜில்லாவிலும் மதுரை ஜில்லாவிலும் நான்கைந்து நாட்கள் மழையிலும் யாத்திரை நடைபெற வேண்டியிருந்தது. மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூகா கரிசல் காட்டுப் பகுதியில் சேற்றிலும், சகதியிலும் யாத்திரை நடைபெற்றது. கால் நடையாக யாத்திரை செய்வதில் விசேஷம் சேறு, சகதியாயிருந்தாலும், மழை பெய்தாலும் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு நாளும் பிரயாணம் நடைபெற்றது. இது கிராம மக்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. மழையிலும் பூமிதான யாத்திரையினரை வரவேற்று பூமிதானம் வழங்கினார்கள். எம். ஏ. பட்டம் பெற்று மேல் நாடுகளிலெல்லாம் சுற்றிவந்திருக்கும் ஒரு அம்மையார் கிராமங்களில் இவ்விதம் மழையிலும் நடந்து வருவது கிராம மக்களுக்கு ஒரே வியப்பு. ஆகையால் எங்கு பார்த்தாலும் பெரிய கூட்டமாக கிராம மக்கள் கூடி பூமிதானச் செய்தியைக் கேட்டனர். திருநெல்வேலி ஜில்லாவில் மணல் தேரிக் காடுகளில் கடுமையான வெய்யிலிலும் யாத்திரை நடைபெற்றது.

யாத்திரையில் ஒரு சில அபூர்வ சம்பவங்கள்

செங்கற்பட்டு ஜில்லாவில் இதுதான் முதல் பூமிதான யாத்திரை. ஸ்ரீ கன்னையா நாயுடு, ஸ்ரீ ஓரக்காடு நாயுடு (தற்பொழுது செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர்), ஸ்ரீ ராமகிருஷ்ணய்யர் எம். எல். ஏ. ஆகியவர்கள் இதில் ஈடுபட்டு உற்சாகமாக வேலை செய்தார்கள். ஒரு அம்மையார் 5 ஏக்கர் நிலதானம் கொடுத்து விமலா தக்கர் அவர்களை வரவேற்றார்கள். இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னவுடனேயே சிறிதும் தாமதம் செய்யாமல் உடனே 7½ ஏக்கர் கொடுத்தார்கள். சீமாவரத்தில் ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் அவசரமாக வெளியூருக்குப் போக வேண்டியிருந்த நிலைமை ஏற்பட்டிருந்தபோதிலும் அதை ரத்து செய்துவிட்டு, விமலா தக்கர் அவர்களையும் பூமிதான யாத்திரா கோஷ்டியினரையும் பிரியத்துடன் வரவேற்றார். அன்று மாலை பூமிதானக் கூட்டத்தில் 3 ஏக்கர் தானம் கொடுக்க முன்வந்தார். பிரியமாக உபசரித்த அன்பரான அவரின் குறைந்த தானத்தை வாங்கமறுப்பதில் விமலா தக்கர் அவர்கள் பின்வாங்கவில்லை. அவருடைய மனம் புண்படும் என்று தெரிந்தும் பணிவுடன் பூமிதான இயக்கத்தின் கொள்கைகளையும், தத்துவங்களையும் விளக்கி 3 ஏக்கர் தானத்தை வாங்கிக்கொள்ள முடியாதென்று வருத்தத்துடன் மறுத்தார்கள். ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் எத்தனை அன்புடன் உபசரித்தாரோ அத்தனை அன்போடு 3 ஏக்கர் நிலதானத்தை 10 ஏக்கராவாக ஆக்கிக்கொடுத்தார். இப்படி அதிகமாகக் கொடுத்ததில் அவருக்கு அதிக திருப்தி ஏற்பட்டது. அத்துடன் இல்லாமல் இயக்கம் வெற்றியடைய ஆசையுள்ளவராகவும் உருவாகிவிட்டார். அதற்குப் பின்னர் 4 நாட்கள் எல்லா வேலைகளையும் போட்டுவிட்டு விமலா தக்கர் அவர்களின் கோஷ்டியாருடன் அவரும் ஊர் ஊராக நடக்க ஆரம்பித்துவிட்டார். கிராமவாசிகள் ஆச்சரியத்தால் திகைத்துவிட்டார்கள் தங்களைப் போன்ற இதர நிலச்சுவான்தார்களைத் தூண்டி நிலதானம் கொடுக்கும்படி செய்து பூமிதான ஊழியராக ஸ்ரீ ராஜகோபால் நாயுடு ஆகிவிட்டார். மதுரை ஜில்லாவிற்கு விமலா தக்கர் அவர்களோடு யாத்திரை செய்ய புறப்பட ஆயத்தமாகிவிட்டார். முதலில் 3 ஏக்கர் கொடுக்க வந்தவர் 10 ஏக்கராவாகக்கொடுத்து பூமிதான இயக்கத்தில் உழைக்கவும் முன்வந்துவிட்டார்.

மதுரை ஜில்லாவில் சிறிய சிறிய விவசாயிகள் தானமாகக் கொடுத்தவர்கள் நூற்றுக்கணக்கான பேர். கல்லுப்பட்டி பிர்க்காவில் சுமார் 120 பேர்கள் 80 ஏக்கர் தானமளித்தார்கள். சாப்டூர் ஜமீன்தார்களைப் போன்ற பெரிய ஜமீன்தார்கள் குறைத்துக் கொடுத்தபொழுது விமலா தக்கர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். நெல்லை ஜில்லாவில் காயாமொழியில் ஒரு அம்மையார் தன் பெயருக்கு பட்டா என்பதற்காக 45 செண்ட் மட்டிலும் வைத்துக்கொண்டு தன்னுடைய சொத்து பூராவையும் பூமிதான இயக்கத்திற்குக் கொடுத்துவிட்டார்கள். நூற்றுக்கணக்கான கிராமவாலிபர்களை இயக்கம் கவர்ந்துவிட்டது. பிர்க்கா வாரியாக ஊழியர்கள் இயக்கத்திற்கு இயங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் உற்சாகம் கரைபுரண்டோடியது. பூமிதான கோஷங்களை முழங்குவதில் பள்ளி மாணவர்களுக்கு மிகுந்த உற்சாகம். பூமிதான இயக்கத்தைப் பற்றிய அரையணு, ஒரணுவில் சிறிய சிறிய புத்தகங்கள் ரூ. 350-க்கு விற்பனையாகியிருக்கிறது.

கடவூர் ஜமீன்தாரின் உதார குணம்

விமலா தக்கர் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் யாத்திரையை முடித்துக்கொண்டு வரும்வழியில் திருச்சியில் 11ம் தேதி இரவு ஹிந்தி பிரசார சபையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கடவூர் ஜமீன்தார் கூட்டத்திற்கு வந்திருந்து 457 ஏக்கர் தானமளித்தது பாராட்டத்தக்கது. இதில் 79 ஏக்கர் நஞ்சை நிலமாகும். கடவூர் ஜமீன்தார் 25 வயது ஆகிய இளைஞர். ஊக்கமும் உற்சாகமும் உடையவர். எதிர்காலத்தில் அவர் தேசப் பணியில் தீவிரமாகப் பங்குகொள்வார் என்பதற்கு நல்ல அறிகுறிகள் அவரிடம் காணப்படுகிறது. அவர் ஜில்லா போர்டு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் முன் வந்து இந்த பொருளாதார சமத்துவ வேள்வியில் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று வினோபாஜி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாகாணங்களிலுள்ள ஜமீன்தார்களும்

3 - JAN 1956
MADRAS

நிலச்சுவான்தார்களும் நூற்றுக் கணக்கில் முன் வந்து தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறார்கள். தமிழ்நாடும் இதில் பின்வாங்காதல்லவா? கடலூர் ஜமீன்தார் இவ்விதம் தைரியமாக முன்வந்து பூமி தான இயக்கத்தில் ஈடுபடுவதை மிகவும் பாராட்டு கிறோம். அவர் திருச்சி ஜில்லாவிற்கே வழிகாட்டி விட்டார். திருச்சி ஜில்லாவிலுள்ள இதர ஜமீன் தார்களும், நிலச்சுவான்தார்களும் தாராளமாக நிலதானம் வழங்கி நிலப்பிரபுத்வ முறையை கலைத்துவிடுவதற்குத் தாங்களே முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் தமிழ்நாடு பூமிதான யாத்திரையை முடித்துக்கொண்டு 12ம் தேதி காலை சென்னை வந்து சேர்ந்தார்கள். குஜராத்தி, மார்வாரி ஆண்களும் பெண்களும் திரண்டு ஒன்றுகூடிய மாபெரும் கூட்டத்தில் பூமி தானக் கருத்துக்களை ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் விளக்கினார்கள். ரூ. 3000 பெருமான கிணறு, மாடு, கலப்பை தானமாக அன்றைய கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. ஸ்ரீ மோதிலால் மேத்தா போன்ற தேச பக்தர்கள் மற்ற பிரபலஸ் தர்களை ஒன்றுகூட்டி சம்பத்து தானம் மேற் கொண்டு வசூலித்துக்கொடுப்பதாக ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களிடம் வாக்குறுதியளித்தனர்.

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் மத்தியப் பிர தேசத்தில் பூமிதான யாத்திரையை மேற்கொள் வதற்காக 13ம் தேதி காலை கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். ஸ்ரீமதி அமிர்தா ராமசுப்ரமணியம், தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன், சென்னை நகர சர்வோதய சமிதி காரியதரிசி ஸ்ரீ பாண்டியாஜி, செங்கற்பட்டு ஜில்லா பூமிதான ஆர்கனைசர் ஸ்ரீ ஜே. மதன்ராஜ் பி. ஏ., மற்றும் ஊழியர்கள் ஸ்ரீமதி விமலா தக்கர் அவர் களுக்கு வழியனுப்பிவைத்தார்கள்.

சென்னைக் கூட்டத்தில் கிடைத்த தான விபரம்.

1.	புருஷோத்தம் கேசவ ராம்ஜப்பி		
	கிணறுக்காக	... ரூ.	1000
	மாடு 2-க்கு	... ,,	200
	கலப்பை	... ,,	10
	விதை	... ,,	20
		மொத்தம் ரூ.	1141
2.	மாபுபாய் மேத்தாவிற்காக மோஹன்லால் ஜீவன்லால் மேத்தா—(முன்மாதிரி)	ரூ.	1241
3.	பெயர் அறிவிக்காத ஒருவர்	,,	241
		மொத்தம் ரூ.	2723

திருச்சிக்கூட்டத்தில் கிடைத்தநிலதானம்.

	புன்செய். ஏ. செ.	நன்செய். ஏ. செ.
திரு. K. K. முத்தையா, கடலூர் ஜமீன்தார்,	379 62	78 94
,, P. பொன்னம்பலக் கவுண்டர்,	11 0	
,, சோமசுந்தரரெட்டியார் M.L.C,	6 0	
,, அவதாநந்தா, திருச்சி.	7 50	
திரு. வீராச்சாமிபடையாச்சி, பிள்ளையார்பாளையம்	10 0	
,, L. சபாபதி பிள்ளை, அயலூர்	11 0	
,, S. ராமசாமி கவுண்டர், புன்னம்	1 0	
,, சின்னப்ப கவுண்டர், பு. புகளூர்	1 0	
,, சுப்பண கவுண்டர், ,,	1 0	
,, S. பெரியசாமி, ஆத்தூர்	1 0	
,, ராஜகோபால், குளித்தலை	0 60	
,, P. M. கோபாலசாமி ரெட்டியார், பெருவள நல்லூர்	5 0	
,, சி. ப. சாம்பசிவ ரெட்டியார், நாகலாபுரம்	5 0	
,, ராமசாமி பிள்ளை, ஒக்கரை	5 0	
,, வெங்கிட்ராம ரெட்டியார், வேளகாநத்தம்	1 0	
,, துரைசாமி ரெட்டியார், ,,	0 66	
,, ஸ்ரீனிவாச ரெட்டியார், ,,	0 5	
,, நல்லப்ப ரெட்டியார், ,,	0 10	
,, நடராஜ ரெட்டியார், ,,	0 10	
,, துரைசாமி ரெட்டியார், T. புத்தூர்	0 60	
,, செ. மு. சுப்பு ரெட்டியார், T. புத்தூர்	0 50	
	447 73	78 94
மொத்தம்	526 67	

****

பல்லடம் தாலுகாவில் பூமிதான யாத்திரை

பூமிதான ஊழியர் ஸ்ரீ தி. கி. ராமன் தலைமை யில் யாத்திரைக் கோஷ்டியார் திருப்பூர் நகரிலும், பல்லடம் வட்டார கிராமங்களிலும் தீவிரமாகப் பிரசாரமும் பிரசுர விற்பனையும் செய்தனர். பி. வடுகபாளையம் வஸ்திராலய மானேஜர் ஸ்ரீ முருகேசன் உதவி குறிப்பிடத்தக்கது.

ஷை யாத்திரைக் கோஷ்டியினர் நாரணபுரம், செட்டிபாளையம், பூமலூர், பள்ளிபாளையம், வாழைத்தோட்டத்து ஐயன்கோவில், சியாமள புரம், சோமனூர், பொங்கலூர், மாதப்பூர், வெங்கட்டாபுரம், வேலப்பகவுண்டன்பாளையம் ஆகிய 11 கிராமங்களுக்கு விஜயம் செய்தனர். (38 மைல் நடை). தற்பொழுது தானம் கிடைத் துள்ளது 5 ஏக்கர் நிலமும் 1 கலப்பை செட். தான விபரம் பின்வருமாறு:—

ஸ்ரீ சி. வெங்கடபதி நாயுடு புளியம்பட்டி 2 ஏ.
,, ப. சுப்பையாக் கவுண்டர் வெங்கட்டாபுரம் 3 ,,
ஷையார் கலப்பை செட் 1

— டி. பி. ராமசாமி

****

இந்த இதழில்

நூல் காணிக்கையில் விஸ்வரூப தரிசனம் 145
ஒற்றை மாட்டுச் செக்கு 146
பூமிதானப் புரட்சியின் சரியான சோதனை 147
பட்டினி வேண்டாம் 148
எல்லோரும் தாருங்கள் "குன்றம்" 149
பல்லடம் தாலுகாவில் பூமிதான யாத்திரை 150
ஸ்ரீமதி விமலா தக்கரின் பூமிதான யாத்திரை வெற்றி 151
சென்னை, திருச்சி பொதுக்கூட்டத்தில் கிடைத்த பூமிதான விபரம் 152

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.